# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# அரையாண்டுப் பரீட்சை 2024

ஆண்டு: 10 திகதி: 22 - 06 - 2024

நேரம்: 2 ½ மணித்தியாலங்கள்

ஆசிரியர் : திருமதி. மாலினி சோமாஸ்கந்தன்

மாணவர் பெயர்: ________________________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 25 | |
| வினா 2 | 20 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 20 | |
| வினா 5 | 15 | |
| வினா 6 | 10 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 25 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

1. **பின்வரும் உரை பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக**

நட்பு என்பது இளம் வயதினர் இடையே இன்றியமையாத ஒன்றாக உருவெடுத்து விட்டது. வேரூன்றியும் விட்டது. குடும்பப் பந்தத்தைப் போலவே நட்பும் அவர்களின் வாழ்வில் ஒரு பிரிக்க முடியாத உறவாகிவிட்டது. அதைவிட நட்பே சில சமயங்களில் அவர்களுக்கு இரத்த உறவுகளை விட வலிமை மிக்கதாகவும் விளங்குகிறது. இதற்கு முக்கிய காரணம் அவர்கள் வாழும் சூழலே ஆகும். தவிர்க்க முடியாத நிலைகளில் பெற்றோர்கள் பிள்ளைகளை விட்டு அதிக நேரம் பிரிந்து இருப்பது நண்பர்கள் தங்கள் ஆதிக்கத்தை செலுத்த இடம் கொடுத்து விட்டது.

நண்பர்கள் என்று அழைக்கும் போது அவர்கள் எல்லோரும் தீயவர்கள் தான் தங்கள் பிள்ளைகளை கெட்ட வழிகளில் விட்டுச் செல்லக் கூடியவர்கள் தான் என்று பெற்றோர்கள் உடனே முடிவெடுத்து விடக் கூடாது. வள்ளுவரின் குறளுக்கொப்ப உடுக்கையை இழந்த கைபோல துன்பம் வரும் பொழுது நொடிப்பொழுதும் தாமதியாமல் செயலாற்றும் தோழர்களும் இந்த நல்லுலகில் இருக்கின்றார்கள். இவர்கள் தங்கள் நண்பர்களின் நடத்தையில் அதிகம் அக்கறை கொண்டவர்கள். சுயநலம் கருதாது தம் சினேகிதனின் நல்வாழ்வு ஒன்றுக்காக பாடுபடுபவர்கள். தோழமைக்கு என்றுமே தோள் கொடுக்கும் இவர்கள், தங்கள் நண்பனுக்கு ஒன்றென்றால் உயிரையும் கொடுக்கும் தன்மை வாய்ந்தவர்கள்.

ரோஜாச் செடியில் ஆங்காங்கே முட்கள் இருப்பது போல நல்ல நண்பர்கள் மத்தியில் கேடு நினைக்கும் தீயவர்களும் இருக்கவே செய்கின்றார்கள். இவர்கள் முகம் மலர்ந்து மட்டுமே நட்புறவாடுவார்கள். தங்களைப் பற்றி மட்டுமே எண்ணுவார்கள். இவர்களின் தீய உள்ளம் அறிந்து அரும்பிலேயே இவர்களின் உறவை அறுத்து விடுவதே நலம் பயக்கும்.

தோலின் மீது இருக்கும் புண் சிறியதாய் இருக்கும்போதே அதற்கு சிகிச்சை அளிப்பது அறிவுடைமை. இல்லையேல் அது சீழ் வைத்து உடலை ஊடுருவி நம் ஆரோக்கியத்தைக் கெடுத்து விடும்.

'உன் நண்பர்கள் யார் என்று சொல் நீ யாரென்று கூறுகின்றேன்' என்கின்றது அயல்நாட்டுப் பழமொழி ஒன்று. நாம் யாருடன் ஆவது நெருக்கமாகப் பழகினால், இயற்கையாகவே அவர்களின் இயல்பு, மொழி பண்பாடு, பழக்க வழக்கம் போன்றவை ஒருவரை எளிதாக தொற்றிக் கொள்கிறது என்கின்றன மனோவியல் ஆய்வுகள். .அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது நல்ல நண்பர்களின் பண்புகளும் பழக்கங்களும் நம்மைச் சேர்ந்தால் அது நமக்கு உயர்வைத் தரும். ஆனால் நேர்மாறாக நடந்து விட்டால் அது நம் வாழ்க்கையையே சீரழித்து விடும்.

இளம் வயதினருக்கு நல்லவற்றையும் தீயவற்றையும் பகுத்துப் பார்க்கும் ஆற்றல் குறைவென்பதால் பெற்றோர்கள் அவர்களிடம் நல்ல நண்பர்களாக பழக வேண்டுவது அவசியம். பிள்ளைகளும் அப்போதுதான் தங்கள்

பெற்றோர்களிடம் மனம் திறந்து பேசுவார்கள். பெற்றோர்கள் நண்பர்களைத் தேர்ந்தெடுப்பதில் அவர்களுக்கு சுலபமாக வழிகாட்ட முடியும்.

1. இளம் வயதினர் நட்பை எவ்வாறு காண்கிறார்கள்?

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

2. நல்ல நட்பு எப்படிப்பட்டது என்று கட்டுரை ஆசிரியர் கூறுகின்றார்?

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

3. தீய நட்பபை தோலின் மீது இருக்கும் புண்ணுக்கு ஒப்பிடுவது ஏன்?

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

4. ”உன் நண்பர்கள் யார் என்று சொல் நீ யாரென்று கூறுகின்றேன்” என்னும் பழமொழி உணர்த்தும் பொருள் யாது?

________________________________________________________

________________________________________________________

________________________________________________________

5. தங்கள் இளம் வயதுப் பிள்ளைகளுக்கு பெற்றோர்கள் எப்பொழுது வழிகாட்ட முடியும்?

________________________________________________________

________________________________________________________

---

6. இந்த உரை பகுதிக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று எழுதுக?

---

| வினா இல | 2 | புள்ளிகள் | 20 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**அ. ஆங்கில சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல் எழுதுக**

பட்டப் படிப்புத் தெரிவுக்காக எனது அண்ணா interview ------------------------------------------------------------------------- குச் செல்கிறார். பிரிஸ்பேன் போக வேண்டி உள்ளது. அவரை நாம் சிட்னி Airport ---------------------------------------------- தில் வழி அனுப்பி வைத்தோம். அண்ணா பிரிஸ்பேன் போய்ச் சேர்ந்ததும் whatsapp ---------------- வழியாக text message ----------------------------------------- அனுப்பி உள்ளார். அவரிடம் smartphone ------------------------------ இருக்கிறது. அதிலே அவர் youtube -------------------- ஐ பயன்படுத்தி படங்கள், விளையாட்டுகள் பார்ப்பார். மேலும் அவர் newspaper ------------------------------------ magazine ------------------------------------ போன்றவற்றை வாசிப்பார். அவர் Skype -------------------------- இல் நண்பர்களுடனும் உறவினர்களுடனும் கதைப்பார்.

GPS ----------------------------- உபயோகித்து மகிழுந்தை ஓட்டுவார்.

**ஆ. வாசித்து வினாக்களுக்கு விடை தருக**

*பேசும்போது நாம் அவதானிக்க வேண்டியவை:*

பேசுகின்ற ஒரு சொல் கேட்பவரை மகிழ்விக்கலாம்.
கேட்பவருக்கு வருத்தத்தைக் கொடுக்கலாம்.
ஒரு சொல் வெல்லும்.
பிறிதொரு சொல் கொல்லும்.
ஒரு சொல் சினத்தைத் தூண்டும்.
இன்னொரு சொல் ஆறுதல் தரும்.
இன்னொரு சொல் இன்பத்தைத் தரும்.
மற்றொரு சொல் துன்பத்தை தரும்.

எனவே ஒன்றைப் பேசுவதற்கு முன் சிந்தித்து சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பேசவேண்டும். மொழியைக் கேட்டு மகிழும் வண்ணம் பயன்படுத்தவேண்டும்.

1. நாம் எப்படி பேச வேண்டும் என்று நினைக்கிறீர்?

______________________________________________

______________________________________________

______________________________________________

2. பேசுவதற்கு முன் எவ்விதம் எதனைச் சிந்திக்க வேண்டும்?

______________________________________________

______________________________________________

______________________________________________

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

பின்வரும் சொற்களை வைத்து ஏழு சொற்களுக் குறையாமல் வசனம் எழுதுக.

1. திருவள்ளுவர்

2. கலைவிழா

3. போர் முரசு

4. அன்சாக் (Anzac) தினம்

5. விளையாட்டு

| வினா இல | 4 | புள்ளிகள் | 20 | பக்கம் | 7 |
|---|---|---|---|---|---|

**கட்டுரை எழுதுதல்:**

பின்வருவனவற்றுள் ஒன்றை தெரிவு செய்து 175 சொற்களில் கட்டுரை எழுதுக.

1. 'தமிழின் பெருமை' என்ற தலைப்பில் உமது தமிழ்ப் பாடசாலையில் நீர் ஆற்ற இருக்கும் உரையை எழுதுக.
2. அவுஸ்திரேலியா விளையாட்டுக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நாடு என்ற வகையில் நீர் விரும்பி விளையாடும் விளையாட்டு ஒன்றைப் பற்றியும் அதனால் ஏற்படும் நன்மை தீமைகளையும் பற்றி கட்டுரை எழுதுக. உதாரணம்: கால் பந்து
3. தனிநாயகம் அடிகளாரின் வாழ்க்கையில் அவர் தமிழுக்கு ஆற்றிய சேவையைப் பற்றிக் கட்டுரை எழுதுக.

| வினா இல | 5 | புள்ளிகள் | 15 | பக்கம் | 10 |
|---|---|---|---|---|---|

**மின்னஞ்சல் எழுதுதல்**:

நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் நடைபெற்ற ஓட்டப்பந்தயத்தில் முதலாவது இடத்தை நீர் பெற்றுள்ளீர். உமக்குத் தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது. இந்தச் சந்தோஷமான செய்தியைத் தெரிவிக்கும் முகமாக உமது ஊரில் இருக்கும் பாட்டிக்கு நூறு சொற்களுக்கு குறையாமல் ஒரு மின்னஞ்சல் எழுதுக.

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

| வினா இல | 6 | புள்ளிகள் | 10 | பக்கம் | 13 |
|---|---|---|---|---|---|

**ஒலிபரப்பப்படும் உரைப்பகுதியைக் கேட்டு விடை எழுதுக.**

| வினாக்கள் | இங்கே குறிப்புகளை எடுக்கவும் |
|---|---|
| கண்ணகியின் கதை விளக்கும் அரசியல் உண்மை யாது ? (2 புள்ளிகள்)<br>______________________<br>______________________<br>______________________<br><br>பொற்கொல்லன் அரசனிடம் என்ன கூறினான்? (2 புள்ளிகள்)<br>______________________<br>______________________<br>______________________<br><br>பாண்டியன் செய்த தவறு என்ன? (2 புள்ளிகள்)<br>______________________<br>______________________<br>______________________<br><br>பாண்டியன் முன் சென்ற கண்ணகியின் கோலம் எவ்வாறு இருந்தது? (2 புள்ளிகள்)<br>______________________<br>______________________<br>______________________<br><br>கண்ணகி எவ்விதம் அரட்டியபடி பாண்டியனைக் காணப் புறப்பட்டாள்? (2 புள்ளிகள்)<br>______________________<br>______________________<br>______________________ | |